**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**
**Case No.C.C.No. 18 /2022**

**Deposition of Witness for Complainant PW1 (LW1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | அமிர்தலிங்கம் |
| **Father's Name** | : | ஆறுமுகம் |
| **Village** | : | மிசன் காம்பவுண்ட் |
| **Taluk** | : | கோத்தகிரி |
| **Calling** | : | சுயதொழில் |
| **Age** | : | 62 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

16.07.2026 **Witness Signature :**

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்பட்டது. 4ம் எதிரி ஆஜர்.**

**இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**PW1 முதல் விசாரணையின் தொடர்ச்சி 04.39 P.M (சாட்சியை கோத்தகிரி தலைமைக் காவலர் எண் 158 திரு. எம். மனோகரன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் Green Valley பள்ளிக்கு மேல்புறம் உள்ள இராமகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான Guest House ஐ குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறேன். கடந்த 2020ம் ஆண்டு கொரோனா ஊரடங்கு காலத்தில் நானும், எனது நண்பர்கள் கனகராஜ் மற்றும வெங்கடேஷ் ஆகியோருடன் Guest House க்கு வெளியில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது TN 37 BE 8312 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற யுனோவா காரில் 3 நபர்கள்

வந்தார்கள். நான் அவர்களை அரசு அதிகாரிகள் என்று நினைத்து Guest House ன் கேட்டை திறந்துவிட்டேன். என்னிடம் Guest House ஐ திறக்க சொன்னார்கள். கொரோனா ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்ததால் Room இல்லை என்று அவர்களிடம் சொன்னேன்.

2. அதிலிருந்த ஒருவர் இது எங்களுடைய சொத்து, நீ வெளியே போ என்று சொன்னார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. 3 நபர்களில் 1 நபர் மிரட்டி அடிக்க வந்தார். அந்த நபர் என்னை பார்த்து தாயோளி என்று தகாத வார்த்தையால் என்னை திட்டி என்னை மிரட்டினார். அந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அந்த நபர் தற்போது ஆஜரில் இல்லை. என்னுடன் இருந்த நண்பர்கள் கனகராஜ் மற்றும் வெங்கடேஷ் என்னை வெளியே அழைத்து வந்துவிட்டார்கள். அப்போது உள்ளே சத்தம் கேட்டது. நான் உள்ளே எட்டிப் பார்த்தபோது Guest House ன் கதவில் பூட்டப்பட்டிருந்த பூட்டை உடைத்துவிட்டார்கள். அதன்பின்னர் அந்த கட்டிடத்தின் உரிமையாளர் இராமகிருஷ்ணனுக்கு தகவல் சொன்னேன். இராமகிருஷ்ணன் அங்கு வந்து அந்த 3 நபர்களிடம் பேசினார்.

3. அவரிடமும் அவர்கள் தகராறு செய்ததால் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் பூட்டைதான் எதிரிகள் உடைத்து சேதப்படுத்தினார்கள். அந்த பூட்டு அ.த.சா.பொ.1 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தெரியும். அவர் அங்கு வரவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**4ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 4ம் எதிரி சம்பவத்தன்று சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். 4ம் எதிரியைப் பற்றி எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் உரிமையாளர் இல்லை என்று சொன்னால் சரிதான். புகாருடன் Lease Agreement எதையும் இணைத்து நான் தரவில்லை என்று சொன்னால் சரிதான்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 16.07.2026
Judicial Magistrate,
Kotagiri